மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# நற்றிணையில் உவம உருபுகளின் பயன்பாடு : ஓர் ஆய்வு
# A Study on the Use of Simile Markers in Natrinai

Thamilarasi N Vishnu / தமிழரசி ந விஷ்ணு[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

Date of Submission: 03-06-2026
Date of Acceptance: 12-06-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சாரம்**

இவ்வாய்வு நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகளின் பயன்பாட்டை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. தொல்காப்பிய உவமையியல் கோட்பாடுகளும் நன்னூல் இலக்கண மரபும் இவ்வாய்வின் கோட்பாட்டு அடித்தளமாக அமைக்கப்பட்டுள்ளன. பண்புசார் ஆய்வு அணுகுமுறையையும் விளக்கவியல் பகுப்பாய்வு முறையையும் அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வில், நற்றிணையில் இடம்பெறும் 400 பாடல்களுள் 39, 84, 85, 167, 204, 252, 253, 264, 393 ஆகிய ஒன்பது பாடல்கள் நோக்கமுடைய மாதிரித் தேர்வு முறையின் வழி ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களில் இடம்பெறும் அன்ன, போல, புரையும், புரை, ஒப்பின், ஏய்ப்ப, கடுப்ப, மருள், ஏர், இன் ஆகிய பத்து உவம உருபுகள் ஆய்வுத் தரவுகளாகக் கொள்ளப்பட்டன. இவ்வுருபுகள் இடம்பெறும் பாடல் வரிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் உவமானம், உவமேயம், பொருள், பாடல் சூழல் மற்றும் உவமை வகை ஆகியவை பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவில், உவம உருபுகள் தலைவியின் அழகு, உடல் அமைப்பு, நெற்றி, கண், தோள், பாதம், காவல் நிலை, பிரிவு உணர்வு, மனநிலை மாற்றம் மற்றும் இயற்கைக் காட்சி ஆகியவற்றைத் தெளிவாகவும் காட்சிநயத்துடனும் வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டது. மேலும், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட உவம உருபுகள் மெய், உரு, பயன் ஆகிய உவமை வகைகளோடு தொடர்புபட்டு, பாடல்களின் உணர்ச்சி ஆழத்தையும் பொருள் நயத்தையும் செறிவுபடுத்துகின்றன என்பதும் புலனாகிறது. ஆகவே, நற்றிணையில் உவம உருபுகள் இலக்கணக் கூறுகளாக மட்டுமன்றி, சங்க அக இலக்கியத்தின் அழகியல் வெளிப்பாட்டை வலுப்படுத்தும் முக்கியமான இலக்கிய உத்திகளாகவும் செயல்படுகின்றன என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**கருச்சொற்கள்:** நற்றிணை, உவம உருபு, உவமை, தொல்காப்பியம், நன்னூல், சங்க இலக்கியம்

**Abstract**

This study examines the use of simile markers in Natrinai, one of the anthologies of the Ettuthokai corpus in Sangam literature. Natrinai is distinguished by its refined portrayal of love-related emotions, human experiences, and natural settings. The study is grounded in the grammatical principles of simile presented in Tolkāppiyam and the grammatical tradition of Nannūl. A qualitative research approach, supported by descriptive textual analysis, was employed. From the 400 poems contained in Natrinai, nine poems, namely Poems 39, 84, 85, 167, 204, 252, 253, 264, and 393, were selected through purposive sampling. Ten simile markers—anna, pōla, puraiyum, purai, oppin, ēyppa, kaṭuppa, maruḷ, ēr, and in—were identified as the primary research data. The selected poetic lines were analysed according to their comparative objects, subjects of comparison, contextual meanings, and corresponding categories of simile. The findings reveal that these markers are used to describe the heroine's beauty, physical features, guarded condition, emotional changes caused by separation, and various aspects of natural imagery. The analysis further indicates that the identified markers are associated with the categories of mey, uru, and payan, and contribute significantly to the visual, emotional, and aesthetic qualities of the poems. Thus, simile markers in Natrinai function not merely as grammatical elements but also as important literary devices that enhance meaning, imagery, and emotional depth. The study also demonstrates the close relationship between classical Tamil grammatical traditions and the artistic expression found in Sangam poetry.

**Keywords:** Natrinai, simile markers, simile, Tolkāppiyam, Nannūl, Sangam literature

**முன்னுரை**

மொழி என்பது மாந்தனின் சிந்தனை, உணர்வு, அனுபவம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடிப்படைத் தொடர்புக் கருவியாகும். அம்மொழியின் இயல்பையும் பயன்பாட்டையும் நெறிப்படுத்துவது இலக்கணம் ஆகும். இலக்கணம் மொழியின் அமைப்பை விளக்குவதோடு மட்டுமல்லாமல், இலக்கியங்களில் கருத்து, காட்சி, உணர்ச்சி ஆகியவை எவ்வாறு நயமாக வெளிப்படுகின்றன என்பதையும் உணர்த்துகிறது. தமிழ்மொழி தொன்மையான இலக்கிய மரபையும் இலக்கண மரபையும் உடைய செம்மொழியாக விளங்குகிறது. அவற்றுள் சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல், பண்பாடு, உணர்ச்சி, இயற்கை உணர்வை வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணை, அகப்பொருள் சார்ந்த காதல் வாழ்வியலை மையமாகக் கொண்ட சிறப்புமிக்க நூலாகும். ‘நல்’ என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைக் குறிக்கும் ‘திணை’ என்னும் சொல்லும் இணைந்து ‘நற்றிணை’ என்ற பெயர் உருவானதாகக் கூறப்படுகிறது. இந்நூல் நானூறு அகவற்பாக்களைக் கொண்டது. தலைவன், தலைவி, தோழி, செவிலி, தாய் ஆகிய மாந்தர்களின் மனநிலைகளும், அவற்றோடு பின்னிப்பிணைந்த இயற்கைச் சூழல்களும் நற்றிணைப் பாடல்களில் நயமாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதனால் நற்றிணை இலக்கிய நயத்தையும் இலக்கணக் கூறுகளையும் ஒருங்கிணைத்து ஆராய்வதற்குரிய முக்கியமான சங்க இலக்கிய நூலாக அமைகிறது (புலியூர்க் கேசிகன், 2001).

இலக்கியத்தின் அழகியலை உருவாக்கும் அணிநலன்களில் உவமை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. ஒரு பொருளின் தன்மை, செயல், வடிவு அல்லது நிறத்தை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டு விளக்குவது உவமை எனப்படுகிறது. உவமையில் ஒப்பிடப்படும் பொருள் உவமேயம் எனவும், ஒப்பிட உதவும் பொருள் உவமானம் எனவும் வழங்கப்படுகிறது. இவ்விரண்டிற்கும் இடையே ஒப்பீட்டு உறவை ஏற்படுத்தும் சொற்களே உவம உருபுகள் எனப்படுகின்றன. இவ்வுருபுகள் பாடல்களில் காட்சிப்படிமம், பொருள் நயம், உணர்ச்சி ஆழம் ஆகியவற்றை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தமிழிலக்கண மரபில் உவமை குறித்த விரிவான சிந்தனைகள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் உவமையியலில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் உவமைகள் தோன்றும் அடிப்படை நிலைகளை,

வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்
(தொல்., உவமை., நூற். 1)

என வகைப்படுத்துகிறார். இச்சூத்திரத்தின் வழி உவமைகள் வினை, பயன், மெய், உரு எனும் நான்கு நிலைகளில் தோன்றுகின்றன என்பது புலனாகிறது. மேலும், உவம உருபுகளின் பயன்பாட்டை விளக்கும் வகையில் தொல்காப்பியர் முப்பத்தாறு உவம உருபுகளைப் பின்வருமாறு சுட்டுகிறார்:

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்ப
கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅ
புல்ல பொருவ பொற்ப போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓட புரைய என்றவை எனாஅ
ஆறு ஆறு அவையும் அன்ன பிறவும்
கூறும் காலை பல்குறிப்பினவே
(தொல்., உவமை., நூற். 282)

மேற்கண்ட நூற்பாவின் வழி அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, மான, ஆங்க, கடுப்ப, மருள, போல, புரைய போன்ற பல்வேறு உவம உருபுகள் இலக்கண ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை ஒரே வகையான ஒப்புமைப்

பொருளை மட்டும் தருவதில்லை. பாடல் சூழலைப் பொறுத்து செயல், பயன், வடிவு, நிறம், தோற்றம் போன்ற பல்வேறு பொருள் நயங்களை வெளிப்படுத்துகின்றன. இதனால் உவம உருபுகள் தமிழ் இலக்கண மரபில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன (வெள்ளைவாரணன், 1985).

**நன்னூலில் உவம உருபுகள்**

தொல்காப்பியத்திற்குப் பிந்தைய இலக்கண மரபிலும் உவம உருபுகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலில்,

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவம உருபே (நன்., நூற். 367)

என உவம உருபுகள் சுட்டப்படுகின்றன. இந்நூற்பா, தொல்காப்பியத்தில் விரிவாகக் கூறப்பட்ட உவம உருபுச் செய்தி பிற்கால இலக்கண மரபிலும் தொடர்ந்திருப்பதைக் காட்டுகிறது. இதன் மூலம் உவம உருபுகள் தமிழ் இலக்கண மரபில் நிலையான இடம் பெற்ற கூறுகளாக விளங்குகின்றன என்பது புலனாகிறது (பவணந்தி முனிவர், 1999).

**நற்றிணையில் உவம உருபுகளை ஆய்வதன் அவசியம்**

சங்க இலக்கியங்களில் உவம உருபுகள் வெறும் இலக்கணச் சொற்களாக மட்டும் அமையாமல், இலக்கியக் காட்சியை உருவாக்கும் கருவிகளாகவும் செயல்படுகின்றன. குறிப்பாக நற்றிணைப் பாடல்களில் தலைவியின் அழகு, தலைவனின் பண்பு, பிரிவால் தோன்றும் மனவேதனை, இயற்கைச் சூழலின் காட்சிநயம் ஆகியவை உவம உருபுகளின் வழி நயமாக வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, நற்றிணையில் இடம்பெறும் உவம உருபுகளை அடையாளம் கண்டு அவற்றின் பயன்பாட்டை ஆராய்வது முக்கியமானதாகும். இத்தகைய ஆய்வு, தமிழிலக்கண மரபும் சங்க இலக்கிய நயமும் ஒன்றோடொன்று எவ்வாறு இணைகின்றன என்பதை விளக்குகிறது.

**ஆய்வு நோக்கம்**

நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகளின் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும்.

**ஆய்வு வரையறை**

நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்கும் நானூறு பாடல்களைக் கொண்ட சங்க இலக்கிய நூலாகும். எனினும், இவ்வாய்வு நற்றிணையில் இடம்பெறும் அனைத்து பாடல்களையும் உள்ளடக்குவதில்லை. ஆய்வின் எல்லையைக் கருத்தில் கொண்டு, 39, 84, 85, 167, 204, 252, 253, 264, 393 ஆகிய ஒன்பது பாடல்கள் மட்டுமே ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், நற்றிணையில் காணப்படும் அனைத்து உவமைகளும் இவ்வாய்வில் ஆராயப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களில் இடம்பெறும் அன்ன, போல, புரையும், புரை, ஒப்பின், ஏய்ப்ப, கடுப்ப, மருள், ஏர், இன் ஆகிய பத்து உவம உருபுகள் மட்டுமே ஆய்வுத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வுருபுகள் இடம்பெறும் பாடல் சூழலும் அவற்றின் பயன்பாடும் மட்டுமே இவ்வாய்வின் ஆய்வெல்லைக்குள் இடம்பெறுகின்றன.

**ஆய்வுச் சிக்கல்**

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் உவம உருபுகள் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சில ஆய்வுகள் குறிஞ்சிப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை போன்ற பத்துப்பாட்டு நூல்களில் இடம்பெறும் உவமை இடைச்சொற்களின் பொருள் ஒப்புமைப் பயன்பாட்டை ஆராய்ந்துள்ளன. மேலும், சங்க அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகளும் நற்றிணையில் இடம்பெறும் பிற இலக்கணக் கூறுகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுகள் சங்க இலக்கியங்களில் உவமைகளின் இலக்கியச் செயல்பாட்டையும் பொருள் நயத்தையும் புரிந்துகொள்வதற்குப் பயனுள்ள அடிப்படையை வழங்குகின்றன.

எனினும், நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகளைத் தனிப்பட்ட ஆய்வுப் பொருளாகக் கொண்டு, அவற்றின் இலக்கணப் பயன்பாடு, பொருள் ஒப்புமை, பாடல் சூழல், இலக்கியச் செயல்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஆராய்ந்த ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, அன்ன, போல, புரையும், புரை, ஒப்பின், ஏய்ப்ப, கடுப்ப, மருள், ஏர், இன் போன்ற உவம உருபுகள் நற்றிணைப் பாடல்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும், அவை தலைவியின் அழகு, உடல் அமைப்பு, காவல் நிலை, பிரிவு உணர்வு, மனநிலை மாற்றம், இயற்கைக் காட்சி ஆகியவற்றை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதும் முழுமையாக விளக்கப்படவில்லை.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகள் தொல்காப்பியர் வகுத்துள்ள வினை, பயன், மெய், உரு ஆகிய உவமை வகைகளோடு எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆகவே, நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகளை அடையாளங்கண்டு, அவற்றின் பயன்பாட்டையும் அவை உருவாக்கும் பொருள், இலக்கிய நயத்தையும் ஆராய்வது இவ்வாய்வின் முதன்மையான ஆய்வுச் சிக்கலாக அமைகிறது.

**ஆய்விலக்கிய மீள்நோக்கு**

உவமை, உவம உருபுகள் தொடர்பாகத் தமிழ் இலக்கிய, இலக்கணத் துறைகளில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகள் உவம உருபுகளின் அமைப்பு, பொருள் ஒப்புமை, இலக்கியப் பயன்பாடு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன.

ராகிணி இரமதாசு, காமினி கணபதி (2025) மேற்கொண்ட “குறிஞ்சிப்பாட்டில் ‘உவமை’ இடைச்சொல்லின் பொருள் ஒப்புமை பயன்பாடு” என்ற ஆய்வில், பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள உவமை இடைச்சொற்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் பொருள் ஒப்புமைப் பயன்பாடு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பண்புசார் ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு, உவமை இடைச்சொற்கள் பாடல்களின் கருத்து வெளிப்பாட்டிற்கும் பொருள் நயத்திற்கும் முக்கிய பங்காற்றுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், இவ்வாய்வு குறிஞ்சிப்பாட்டை மையமாகக் கொண்டுள்ளதால், எட்டுத்தொகை நூலான நற்றிணையில் இடம்பெறும் உவம உருபுகளின் பயன்பாடு இதில் ஆராயப்படவில்லை.

அதேபோல், ராகிணி இரமதாசு, மனோன்மணி தேவி அண்ணாமலை (2025) மேற்கொண்ட “பெரும்பாணாற்றுப்படையில் ‘உவமை’ இடைச்சொல்லின் பொருள் ஒப்புமை பயன்பாடு” என்ற ஆய்வில், பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள உவமை இடைச்சொற்கள் ஆராயப்பட்டுள்ளன. சங்ககால மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, இயற்கைச் சூழலை வெளிப்படுத்துவதில் உவமை இடைச்சொற்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், இவ்வாய்வு பத்துப்பாட்டு நூலை மையமாகக் கொண்டிருப்பதால், நற்றிணையில் காணப்படும் உவம உருபுகளின் பயன்பாடு குறித்து விளக்கமளிக்கவில்லை.

கௌசல்யா லெட்சுமி (2023) மேற்கொண்ட “சங்கக்கால அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகள்” என்ற ஆய்வில், சங்க அக இலக்கியங்களில் இடம்பெறும் காதல் சார்ந்த உவமைகள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வு, அக இலக்கியங்களில் உவமைகள் உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் காட்சி நய உருவாக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், இவ்வாய்வு உவமைகளின் இலக்கியப் பயன்பாட்டை மையமாகக் கொண்டுள்ளதே தவிர, உவம உருபுகளின் செயல்பாட்டைத் தனியாக ஆராயவில்லை.

மலையாண்டி (2025) மேற்கொண்ட “நற்றிணையில் உடம்படுமெய்” என்ற ஆய்வில், நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட இலக்கணக் கூறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு நற்றிணையில் இலக்கணக் கூறுகளை ஆராய்வதற்கான சாத்தியத்தை வெளிப்படுத்துகிறது. எனினும், உவம உருபுகள் தொடர்பான தனித்த ஆய்வு இதில் இடம்பெறவில்லை.

மேற்கண்ட ஆய்வுகளை நோக்குகையில், உவமை, உவம உருபுகள் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இருப்பினும், அவை பெரும்பாலும் பத்துப்பாட்டு நூல்கள், அக இலக்கியங்களில் இடம்பெறும் உவமைகள் அல்லது பிற இலக்கணக் கூறுகளை மையமாகக் கொண்டுள்ளன. நற்றிணையில் இடம்பெறும் உவம உருபுகளைத் தனிப்பட்ட ஆய்வுப் பொருளாகக் கொண்டு, அவற்றின் பயன்பாட்டை ஆராய்ந்த ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே, நற்றிணையில் இடம்பெறும் உவம உருபுகளை அடையாளம் கண்டு அவற்றின் பயன்பாட்டை ஆராயும் இவ்வாய்வு, முன்னைய ஆய்வுகளின் தொடர்ச்சியாகவும் ஆய்விடைவெளியை நிரப்பும் முயற்சியாகவும் அமைகிறது.

**ஆய்வு நெறிமுறை**

இவ்வாய்வு பண்புசார் ஆய்வு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புசார் ஆய்வு என்பது ஒரு இலக்கிய அல்லது மொழியியல் கூறை அதன் தன்மை, பொருள், பயன்பாட்டின் அடிப்படையில் ஆராயும் முறையாகும். இவ்வாய்வில் நற்றிணையில் இடம்பெறும் உவம உருபுகள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் பயன்பாடுகள் விளக்கப்படுகின்றன.

இவ்வாய்விற்கான முதன்மைத் தரவாக நற்றிணை நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நற்றிணையில் இடம்பெறும் 400 பாடல்களுள் உவம உருபுகள் இடம்பெற்றுள்ள 39, 84, 85, 167, 204, 252, 253, 264, 393 ஆகிய ஒன்பது பாடல்கள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் இடம்பெறும் அன்ன, போல, புரையும், புரை, ஒப்பின், ஏய்ப்ப, கடுப்ப, மருள், ஏர், இன் ஆகிய பத்து உவம உருபுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தரவுகள் சேகரிக்கப்பட்ட பின்னர் அவை தொல்காப்பிய உவமையியலும் நன்னூல் இலக்கண மரபும் அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. குறிப்பாக, உவம உருபுகள் இடம்பெறும் பாடல் வரிகள் அடையாளம் காணப்பட்டு அவை எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும், பாடல் சூழலில் அவற்றின் பயன்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதும் விளக்கப்பட்டன. மேலும், தொல்காப்பியர் வகுத்துள்ள வினை, பயன், மெய், உரு ஆகிய உவமை வகைப்பாடுகளின் அடிப்படையில் உவம உருபுகளின் பயன்பாடு ஆராயப்பட்டுள்ளது. இவ்வாறு விளக்கவியல் அணுகுமுறையின் வழி உவம உருபுகளின் இலக்கணப் பயன்பாடும் பாடல் சூழலில் அவை பெறும் பொருளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**ஆய்வுக் கண்டுபிடிப்புகளும் கலந்துரையாடலும்**

**‘அன்ன’ உவம உருபு**

பாவை அன்ன பழிதீர் காட்சி (நற்றிணை, 252)

இப்பாடலில் தலைவன் பொருள் தேடிச் செல்லும் சூழலில் தலைவி துயரப்படாமல் மனப்பக்குவத்துடன் இருப்பதைத் தோழி பாராட்டும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில் தலைவியின் அழகிய தோற்றத்தை வருணிக்கும் இடத்தில் “பாவை அன்ன பழிதீர் காட்சி” என்ற வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “அன்ன” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “பாவை” என்பது உவமானமாகவும், தலைவியின் “பழிதீர் காட்சி” அதாவது குற்றமற்ற அழகிய தோற்றம் உவமேயமாகவும் அமைகிறது. பாவை என்பது அழகு, அமைதி, நேர்த்தி, குற்றமின்மை ஆகிய பண்புகளை உணர்த்தும் உருவமாகும். இதனால் தலைவியின் தோற்றம் பாவை என்னும் காட்சிப்பொருளைப் போன்ற குற்றமற்ற அழகுடன் இருப்பதாகப் புலவர் எடுத்துரைக்கிறார். இச்சான்றில் “அன்ன” உருபு தலைவியின் தோற்றத்தைப் பாவையுடன் ஒப்பிடுவதால், இது மெய் உவமையாக அமைகிறது.

**‘புரையும்’ உவம உருபு**

முயல் வேட்டு எழுந்த முடுகு விசைக் கத நாய்

நல் நாப் புரையும் சீறடி (நற்றிணை, 252)

நற்றிணை 252ஆம் பாடலில் தலைவியின் உடல் அழகை வருணிக்கும் இடத்தில் “நல் நாப் புரையும் சீறடி” என்ற வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “புரையும்” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “நல் நாப்” என்பது உவமானமாகவும் தலைவியின் “சீறடி” அதாவது சிறிய மென்மையான அடி உவமேயமாகவும் அமைகிறது. முயல் வேட்டைக்குச் செல்லும் நாயின் நாக்கு மென்மையாகவும் நுட்பமான வடிவத்துடனும் இருப்பதைப் போல, தலைவியின் உள்ளங்கால் அடிகளும் மென்மையும் சிறுமையும் உடையதாகக் காட்டப்படுகின்றன. இவ்வரியில் தலைவியின் சீறடி, நாயின் நாவின் மென்மையுடனும் வடிவத்துடனும் ஒப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வொப்புமை மெய் உவமையாகக் கொள்ளப்படுகிறது.

**‘போல’ உவம உருபு**

பலவு உறு குன்றம் போல (நற்றிணை, 253)

நற்றிணை 253ஆம் பாடலில் தோழி தலைவனிடம் தலைவியின் நிலையைச் சொல்கிறாள். தலைவி எளிதில் சந்திக்க முடியாத கடுமையான காவலில் இருப்பதை உணர்த்தும் இடத்தில் “பலவு உறு குன்றம் போல” என்ற வரி வருகிறது. இவ்வரியில் “போல” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்குப் பலாப்பழங்கள் நிறைந்த குன்றம் உவமானமாகவும், தலைவியின் அரிய காவல் நிலை உவமேயமாகவும் அமைகிறது. குன்றம் உயரமாகவும் பலாப்பழங்கள் நிறைந்ததாகவும் இருப்பதால் அது எல்லோராலும் எளிதில் அணுக முடியாத இடமாகக் காட்டப்படுகிறது. அதுபோல தலைவி கடுமையான காவலில் இருப்பதால் தலைவனால் எளிதில் அணுக முடியாதவளாக இருக்கிறாள். “போல” என்னும் உருபு தலைவியின் காவல் நிலையைக் குன்றத்தின் அணுக முடியாத தன்மையுடன் ஒப்பிட்டு விளக்குகிறது. அணுக முடியாத நிலை என்ற பயன் அடிப்படையில் அமைவதால், இது பயன் உவமையாகக் கொள்ளப்படுகிறது.

**‘புரை’ உவம உருபு**

மணி புரை எருத்தின் மஞ்ஞை போல (நற்றிணை, 264)

இப்பாடலில் காதலன் காதலியைத் தன்னுடன் அழைத்துச் செல்லும்போது, தங்கள் ஊருக்கு அருகில் வந்துவிட்டதை உணர்த்துகிறான். மாலை நேரத்தில் மழை பெய்யும் சூழல், மயிலின் ஆட்டம், காற்றில் அசையும் கூந்தல், கோவலர் ஓட்டிவரும் பசுக்களின் மணியொலி ஆகிய காட்சிகள் பாடலில் வருணிக்கப்படுகின்றன. அச்சூழலில் “மணி புரை எருத்தின் மஞ்ஞை போல” என்ற வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “புரை” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “மணி” என்பது உவமானமாகவும் “எருத்து” அதாவது ஆண்மயிலின் பிடரி உவமேயமாகவும் அமைகிறது. மயிலின் பிடரிப் பகுதியின் நீல நிறம், மணியின் நிறத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இது நிற ஒற்றுமை அடிப்படையில் அமைவதால், இவ்வொப்புமை உரு உவமையாகத் திகழ்கிறது.

**‘ஒப்பின்’ உவம உருபு**

பெருநீர் ஒப்பின் பேஎய் வெண்தேர் (நற்றிணை, 84)

நற்றிணை 84ஆம் பாடலில், தலைவன் பொருள் தேடிச் செல்லும் சூழலைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள். தலைவன் தன்னிடம் வந்தவர்களுக்கு “இல்லை” என்று சொல்ல இயலாத மனநிலையுடையவன். அதனால் அவர்களுக்கு உதவப் பொருள் ஈட்டுவதற்காகக் கடினமான பாலை வழியில் செல்கிறான். அந்தப் பாலை நிலத்தின் வெப்பமும் மாயத் தோற்றங்களும் வருணிக்கப்படும் பகுதியில் “ஒப்பின்” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “பெருநீர்” என்பது உவமானமாகவும் “பேஎய் வெண்தேர்” அதாவது பாலை நிலத்தில் நீர் இருப்பது போலத் தோன்றும் மாயத் தோற்றம் உவமேயமாகவும் அமைகிறது. தொலைவில் பெரிய நீர்ப்பரப்பு இருப்பது போலத் தோன்றும் அந்த வெண்மையான மாயக் காட்சி, உண்மையில் நீர் அல்ல. எனவே, “ஒப்பின்” என்னும் உருபு பாலை நிலத்தில் தோன்றும் மாயக் காட்சியைப் பெருநீருடன் ஒப்பிட்டு காட்டுகிறது. தோற்ற ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டதால், இது உரு உவமையாக அமைகிறது.

**‘ஏய்ப்ப’ உவம உருபு**

தலை மருப்பு ஏய்ப்ப, கடை மணி சிவந்த நின் கண்ணே (நற்றிணை, 39)

நற்றிணை 39ஆம் பாடலில், தலைவன் தலைவியிடம் தனது காதல் உணர்வை வெளிப்படுத்தும் சூழல் காணப்படுகிறது. தலைவி நாணத்தால் பேசாமல் தலைகுனிந்து நிற்க, அவளின் கண் அழகை வருணிக்கும் இடத்தில் இவ்வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “ஏய்ப்ப” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “தலை மருப்பு” அதாவது யானையின் தந்தம் உவமானமாகவும் தலைவியின் “கடை மணி சிவந்த கண்” உவமேயமாகவும் அமைகிறது. யானையின் தந்தத்தில் காணப்படும் சிவப்பு நிறத்துடன் தலைவியின் கண் ஓரச் சிவப்பு ஒப்பிடப்படுகிறது. எனவே, “ஏய்ப்ப” என்னும் உருபு இங்கு நிற ஒற்றுமையை உணர்த்துகிறது. நிறத்தை அடிப்படையாகக் கொண்ட ஒப்புமை என்பதால் இது உரு உவமையாக அமைகிறது.

### ‘கடுப்ப’ உவம உருபு

ஏறு பிரி மடப் பிணை கடுப்ப வேறுபட்டு (நற்றிணை, 204)

இப்பாடலில் தலைவன், தலைவியுடன் நிகழ்ந்த சந்திப்பைத் தோழியிடம் கூறுகிறான். தலைவியிடம் தனது காதலை வெளிப்படுத்திய பின்னர், அவள் தன் விருப்பத்தை மறைமுகமாக உணர்த்திவிட்டு ஊரை நோக்கிச் செல்லும் சூழல் பாடலில் இடம்பெறுகிறது. அச்சூழலில் “ஏறு பிரி மடப் பிணை கடுப்ப வேறுபட்டு” என்ற வரி வருகிறது. இவ்வரியில் “கடுப்ப” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “ஏறு பிரி மடப் பிணை” அதாவது ஆண்மானைப் பிரிந்த பெண்மான் உவமானமாகவும், தலைவி உவமேயமாகவும் அமைகிறாள். ஆண்மானைப் பிரிந்த பெண்மான் எவ்வாறு வருத்தத்துடனும் தனிமை உணர்வுடனும் காணப்படுகிறதோ, அதுபோல தலைவியும் பிரிவின் உணர்வால் மாறுபட்ட மனநிலையில் காணப்படுகிறாள். “கடுப்ப” என்னும் உருபு தலைவியின் மனநிலையைப் பெண்மானின் நிலையுடன் ஒப்பிட்டு விளக்குகிறது. பிரிவினால் உருவாகும் மனநிலை மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதால், இது பயன் உவமையாக அமைகிறது.

### ‘மருள்’ உவம உருபு

வேய் மருள் பணைத் தோள் (நற்றிணை, 85)

நற்றிணை 85ஆம் பாடலில், தலைவியின் காதல் துயரத்தையும் அவளது உடல் மாற்றத்தையும் தோழி உணர்த்தும் சூழல் காணப்படுகிறது. தலைவியின் கண்களில் பனி தேங்கியிருப்பதும், அவளது தோள்களில் அணிகலன்கள் நழுவுவதும் பாடலில் குறிப்பிடப்படுகிறது. அச்சூழலில் “வேய் மருள் பணைத் தோள்” என்ற வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “மருள்” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “வேய்” அதாவது மூங்கில் உவமானமாகவும் தலைவியின் “பணைத் தோள்” உவமேயமாகவும் அமைகிறது. மூங்கிலைப் போன்ற நீளமும் மென்மையும் கொண்ட தோள்கள் தலைவிக்கு உள்ளது என்பதை இவ்வரி உணர்த்துகிறது. தலைவியின் தோள் மூங்கிலின் வடிவத்துடன் ஒப்பிடப்படுவதால், இது மெய் உவமையாக அமைகிறது.

### ‘ஏர்’ உவம உருபு

பிறை ஏர் திரு நுதல் பாஅய பசப்பே (நற்றிணை, 167)

நற்றிணை 167ஆம் பாடலில், தலைவனின் தூதுச் செய்தியுடன் வந்த பாணனிடம் தோழி தலைவியின் நிலையை எடுத்துரைக்கிறாள். தலைவனைப் பிரிந்ததால் தலைவி தனது உடல் அழகையும் பெண்மை நலத்தையும் இழந்து வருந்துகிறாள். அச்சூழலில் “பிறை ஏர் திரு நுதல் பாஅய பசப்பே” என்ற வரி இடம்பெறுகிறது. இவ்வரியில் “ஏர்” என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்குப் “பிறை” என்பது உவமானமாகவும் தலைவியின் “திரு நுதல்” உவமேயமாகவும் அமைகிறது. பிறையைப் போன்ற அழகும் ஒளிவும் கொண்ட நெற்றி, பிரிவுத் துயரத்தால் பசலைப் படர்ந்து அதன் இயல்பான அழகை இழந்துள்ளதாகப் புலவர் கூறுகிறார். எனவே, “ஏர்” என்னும் உருபு தலைவியின் நெற்றியைப் பிறையுடன் ஒப்பிட்டு காட்டுகிறது. தோற்ற அழகு அடிப்படையில் அமைவதால், இது உரு உவமையாகக் கொள்ளப்படுகிறது.

### ‘இன்’ உவம உருபு

நிலை கிளர் மீனின், தோன்றும் நாடன் (நற்றிணை, 393)

நற்றிணை 393ஆம் பாடலில், தலைவன் திருமண நோக்கத்துடன் வருகிற நிலையைத் தோழி தலைவியிடம் கூறுகிறாள். தலைவனின் மலைநாட்டில், தினைப்புனத்தை அழிக்க வரும் யானையை விரட்டுவதற்காக கானவர் எரியும் பந்தத்தை வீசுகின்றனர். அந்தப் பந்தம் மலைப்பகுதியில் மின்னிக்கொண்டு பாயும் காட்சி வருணிக்கப்படும் இடத்தில் “நிலை கிளர் மீனின்” என்ற வரி வருகிறது. இவ்வரியில் “இன்” என்னும் உருபு உவமப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு “நிலை கிளர் மீன்” அதாவது வானில் ஒளிர்ந்து செல்லும் எரிமீன் உவமானமாகவும் கானவர் எறிந்த எரியும் பந்தம் உவமேயமாகவும் அமைகிறது. எரியும் பந்தத்தின் மின்னும் தோற்றம், வானில் பாயும் எரிமீனுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. ஒளி, தோற்ற ஒற்றுமையின் காரணமாக, “இன்” உருபு உரு உவமையாக அமைகிறது.

**முடிவுரை**

இவ்வாய்வு நற்றிணைப் பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகளின் பயன்பாட்டை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பாடல்களில் அன்ன, போல, புரையும், புரை, ஒப்பின், ஏய்ப்ப, கடுப்ப, மருள், ஏர், இன் ஆகிய பத்து உவம உருபுகள் கண்டறியப்பட்டன. ஆய்வின் வழி, நற்றிணையில் உவம உருபுகள் வெறும் ஒப்பீட்டுச் சொற்களாக மட்டும் அமையவில்லை என்பது தெளிவாகிறது. அவை பாடலின் சூழலை நயமாக விளக்கவும், பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், காட்சியை வாசகரின் மனதில் தெளிவாக உருவாக்கவும் துணை செய்கின்றன. குறிப்பாக, மெய் உவமை வழி வடிவ ஒற்றுமையும், உரு உவமை வழி நிறம், தோற்ற ஒற்றுமையும், பயன் உவமை வழி மனநிலை மாற்றமும் வெளிப்படுகின்றன.

எனவே, நற்றிணையில் உவம உருபுகளின் பயன்பாடு இலக்கணக் கூறாக மட்டுமல்லாமல் இலக்கிய நயத்தை உருவாக்கும் முக்கிய கருவியாகவும் விளங்குகிறது. இதன் மூலம் தொல்காப்பிய உவமையியல் மரபு சங்க இலக்கியப் பாடல்களில் இயல்பாகச் செயல்பட்டிருப்பது புலனாகிறது. எதிர்கால ஆய்வுகளில் நற்றிணையின் அனைத்து பாடல்களிலும் இடம்பெறும் உவம உருபுகளை விரிவாக ஆராய்ந்தால், சங்க இலக்கியங்களில் உவம உருபுகளின் பயன்பாட்டை மேலும் தெளிவாக அறிய முடியும்.

**துணைநூற்பட்டியல்**


கௌசல்யா லெட்சுமி, ஜெ. (2023). சங்கக்கால அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகள். Malaysian Journal of Tamil, 1(2), 107–112. Retrieved from https://kpatmalaysia.com/ojs/index.php/mjt/article/view/62

பவணந்தி முனிவர். (1999). நன்னூல் மூலமும் விருத்தியுரையும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

புலியூர்க் கேசிகன். (2001). நற்றிணை: 201–400 செய்யுட்கள். பாரி நிலையம்.

மலையாண்டி, ப. (2025). நற்றிணையில் உடம்படுமெய். Journal of Valartamil, 6(2), 98–105. https://doi.org/10.37134/jvt.vol6.2.10.2025

ராகிணி இரமதாசு, ர., & அண்ணாமலை, ம. தே. (2025). பெரும்பாணாற்றுப்படையில் ‘உவமை’ இடைச்சொல்லின் பொருள் ஒப்புமை பயன்பாடு. Malaysian Journal of Tamil Studies, 3(2), 8–17.

ராகிணி இரமதாசு, ர., & கணபதி, க. (2025). குறிஞ்சிப்பாட்டில் ‘உவமை’ இடைச்சொல்லின் பொருள் ஒப்புமை பயன்பாடு. Malaysian Journal of Tamil Studies, 3(2), 26–31.

வெள்ளைவாரணன், க. (1985). தொல்காப்பியம்: உவமையியல் உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.